மாண்புமிகு திரு செ. மாதவன் : இதுபற்றி மத்திய தொழிலமைச்சரை கேட்க வேண்டும்.

Additional Courts for West Ramanathapuram.

* 111 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. Minister for Ind ustries be pleased to state :—

(*a*) whether the Government have received the resolution passed unanimously by the West Ramanathapuram District Deveolpment Council demanding the location of a Sub-Court at Srivilliputhur and a Sub-Magistrate's Court at Rajapalayam ; and

(*b*) the steps taken on the resolution?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஸ்ரீவில்லிப்புத்தூரில் துணை நீதிமன்றம் ஒன்றையும், ராஜப் பாளையத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் ஒன்றையும் அமைப்பது குறித்த செயற்குறிப்பு, இம் மாநிலத்தில் உள்ள உரிமை வழக்கு நீதி மன்றங்கள், குற்ற வழக்கு நீதி மன்றங்கள் ஆகியவற்றின் ஆட்சி வரம்பைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டு சென்னையில் செயல் படும் குழுவின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்சொன்ன குழுவின் அறிக்கை இன்னும் வரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் குழு பல மாவட்டங்களுக்கும் சென்று விவரங்களைச் சேகரிப்பது முடிந்து விட்டதா? இன்னும் எத்தனை நாட்களுக்குள் அறிக்கையை வெளியிட வேண்டுமென்று வரம்பு நிர்ண யிக்கப்பட்டுள்ளதா ? விரைவில் அறிக்கை வெளியிடப்படுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : எல்லா பரிசீலனையும் முடிந்து விட்டது என்று தெரிவித்திருக்கிறார்கள். இறுதியாகப் பரிசீலித்து எல்லா நீதிமன்றங்களைப் பற்றியும் ஓர் அறிக்கை தருவதாகக் கூறி இருக்கிறார்கள். மிக விரைவில் தர வேண்டுமென்று அரசு சார்பில் வலி யுறுத்தப்பட்டிருக்கிறது.

கும்முடிப்பூண்டி இராஜனேரி நீர்த் தேக்கம்.

*112 வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், தேர்வாய் அருகில் அமையும் இராஜனேரி நீர்த் தேக்கத் திட்டத்தின் பணி எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பொதுப்பணித்துறை அதிகாரிகள் இத் திட்டத்தை ஆய்விற்காக எடுத்துக் கொண்டுள்ளனர்.